71. அல்மெய்டாவின் மகன் கொல்லப்பட்ட போர் நடைபெற்ற இடம் ______.

(1) கண்ணனூர் (2) சாவல் (3) சூரத் (4) சின்சுரா

72. 1515 இல் பாரசீக வளைகுடாவிலுள்ள ஆர்மஸ் துறைமுகப் பகுதியில் போர்ச்சுக்கீசிய அதிகாரத்தை விரிவுபடுத்தியவர் ______.

(1) அல்மெய்டா (2) அல்புகர்க் (3) நினோ-டி-குன்கா (4) காப்ரல்

73. 1534 ல் குஜராத் பகதூர்ஷாவிடமிருந்து பசீன் பகுதியைக் கைப்பற்றியவர்

(1) அல்மெய்டா (2) அல்புகர்க் (3) நினோ-டி-குன்கா (4) காப்ரல்

74. கத்தோலிக்கக் கிறிஸ்தவம் இந்தியாவின் கிழக்கு, மேற்குக் கடற்கரையோரப் பகுதிகளில் பரவக் காரணம் ______.

(1) போர்ச்சுகீசியரின் செல்வாக்கு (2) ஆங்கிலேயச் செல்வாக்கு

(3) டச்சுக்காரரின் செல்வாக்கு (4) டேனியர் செல்வாக்கு

75. தவறான இணையைக் காண்.

(1) அம்பாய்னா படுகொலை - 1623

(2) பெடரா போர் - 1795

(3) வாஸ்கோடகாமா இறப்பு - 1524

(4) போர்ச்சுகீசியக் கடற்படை மேலாண்மை - 1509

76. கீழ்க்கண்ட டச்சுக்காரர்கள் கைப்பற்றிய கோட்டைகளுள் பொருந்தாதது எது?

(1) கடலூர் (2) பரங்கிப்பேட்டை (3) நாகப்பட்டினம் (4) வேலூர்

77. கூற்றுகளை ஆராய்க.

கூற்று A: 1760 இல் பெடரா போர், டச்சுக்காரர்கள் மற்றும் ஆங்கிலேயரிடையே நடைபெற்றது.

LIVEWORKSHEETS

கூற்று B: 1623ல் டச்சுக்காரர்கள் அம்பாய்னாவில் ஆங்கிலேய வியாபாரிகளைக் கொன்றனர்.

(1) A, B சரி (2) A தவறு, B சரி (3) A, B தவறு (4) A சரி, B தவறு

78. பழவேற்காட்டிலிருந்து _______ மேற்கத்திய நாடுகளுக்கு ஏற்றுமதியானது.

(1) பழங்கள் (2) வைரங்கள் (3) துணிகள் (4) கருமிளகு

79. இலண்டன் வர்த்தக நிறுவனத்திற்கு இராணி எலிசபெத் அனுமதி பட்டயம் வழங்கி நாள் _______.

(1) 31.12.1600 (2) 1.1.1600 (3) 12.12.1600 (4) 16.12.1600

80. இலண்டன் வர்த்தக நிறுவனம் _______ கவர்னர், _______ இயக்குநர் கொண்டது.

(1) 1, 20 (2) 1, 24 (3) 1, 23 (4) 1, 30

81. கூற்றுகளை ஆராய்க.

கூற்று A: ஜஹாங்கீர் 1613 இல் சூரத்தில் ஆங்கில வர்த்தக மையத்திற்கு அனுமதியளித்தார்.

காரணம் R: ஆங்கிலத் தளபதி தாமஸ் பெஸ்ட், போர்ச்சுக்கீசிய கடற்படையைத் தோற்கடித்தார்.

(1) A, R சரி (2) A, R தவறு (3) A சரி, R தவறு (4) A தவறு, R சரி

82. 1614 இல் கேப்டன் நிக்கோலஸ் டவுண்டன் _______ ஐ வென்றார்.

(1) டேனியர் (2) பிரெஞ்சுக்காரர் (3) போர்ச்சுகீசியர் (4) டச்சுக்காரர்

83. ஆங்கிலேயரின் முதல் வர்த்தக மையம் _______.

(1) சூரத் (2) மசூலிப்பட்டினம் (3) அகமதாபாத் (4) சென்னை

84. ஆங்கிலேயரின் முதல் கோட்டை மற்றும் கிழக்குப் பகுதி தலைமையிடம் எது?

(1) புனித ஜார்ஜ் கோட்டை (2) வில்லியம் கோட்டை

(3) கெல்டிரியா கோட்டை (4) புனித டேவிட் கோட்டை

85. 1690 இல் ஜாப் சார்னாக் _______ என்னுமிடத்தில் வர்த்தக மையம் நிறுவினார்.

LIVEWORKSHEETS

(1) கோவிந்தபூர் (2) சுதாநுதி

(3) காளிகட்டம் (4) புரோச்

86. ______ ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியா, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியிலிருந்து ஆங்கில அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

(1) 1857 (2) 1858 (3) 1885 (4) 1947

87. ______ திருமணத்தில் பம்பாய், திருமணச் சீராகக் கிடைத்தது.

(1) இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ் - போர்ச்சுகீசிய இளவரசி காதரின்

(2) போர்ச்சுகீசிய மன்னர் இரண்டாம் சார்லஸ் - இங்கிலாந்து இளவரசி காதரின்

(3) இங்கிலாந்து இளவரசி காதரின் - போர்ச்சுகீசிய மன்னர் எட்வர்டு

(4) இங்கிலாந்து மன்னர் எட்வர்டு - போர்ச்சுகீசிய இளவரசி காதரின்

88. டேனியர்களின் இந்தியத் தலைமையிடம் ______.

(1) தரங்கம்பாடி (2) செராம்பூர் (3) கோவா (4) மாஹி

89. வியாபாரத்திற்காக இந்தியாவிற்கு வருகைபுரியாத ஐரோப்பிய நாடு ______.

(1) இங்கிலாந்து (2) டென்மார்க் (3) ஜெர்மனி (4) நெதர்லாந்து

90. முதல் பிரெஞ்சு வணிக மையத்தை ______ என்பவர் ______ நகரில் நிறுவினார்.

(1) கரோன், மாஹி (2) கரோன், சூரத்

(3) கால்பர்ட், மாஹி (4) கால்பர்ட், பாலசோர்

91. 1669 இல் இரண்டாவது பிரெஞ்சு வணிக மையத்தை ______ என்பவர் ______ நகரில் நிறுவினார்.

(1) மார்காரா, மசூலிப்பட்டினம் (2) மார்காரா, சூரத்

(3) டியூப்ளே, பாண்டிச்சேரி (4) டியூப்ளே, மசூலிப்பட்டினம்

LIVEWORKSHEETS

92. பாண்டிச்சேரிக் குடியேற்றத்தை நிறுவியவர் ______.

(1) டியூப்ளே (2) கரோன் (3) மார்ட்டின் (4) லூயிஸ்

93. பாண்டிச்சேரி செயின்ட் லூயிஸ் கோட்டையைக் கட்டியவர் ______.

(1) பிரான்காய்ஸ் மார்ட்டின் (2) பிரான்காய்ஸ் கரோன்

(3) மார்கரா (4) ஷெர்கான் லோடி

94. தவறான இணையைக் கண்டறிக.

(1) வங்காளத்தின் முகலாய ஆளுநர் - செயிஸ்டகான்

(2) சந்திரநாகூர் நகர் நிர்ணயம் - 1673

(3) ஜோசப் பிராங்காய்ஸ் டியூப்ளே - 1742

(4) 1673 இல் பீஜப்பூர் ஆட்சியாளர் - இப்ராஹிம் லோடி

95. டியூப்ளேக்கு பிறகு பாண்டிச்சேரியின் பிரெஞ்சு ஆளுநர் ______.

(1) டூமாஸ் (2) ஷெர்கான் லோடி

(3) கரோன் (4) ஜோதன்பர்க்

96. கூற்றுகளை ஆராய்க.

கூற்று A: தூரக்கிழக்கு நாடுகளுடன் வணிகம் செய்ய, ஜோதன்பர்க் சுவீடன் கிழக்கிந்தியக் கம்பெனியை நிறுவினார்.

காரணம் R: டச்சு, மற்றும் ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் தோற்றமானது ஊக்குவிப்பாக இருந்தது.

(1) கூற்று A, R தவறு (2) கூற்று A, R ம் சரி

(3) கூற்று A சரி, R தவறு (4) கூற்று A தவறு, R சரி

97. போர்ச்சுக்கீசிய வணிக மையம் அல்லாதது எது?

(1) சால்செட் (2) பசீன் (3) சூரத் (4) சாந்தோம்

98. டச்சு வணிக மையம் அல்லாதது எது?

(1) சின்சுரா (2) சௌஸ் (3) காசிம்பஜார் (4) பாட்னா

LIVEWORKSHEETS

99. பிரெஞ்சு வணிக மையம் அல்லாதது எது?

(1) சூரத் (2) மசூலிப்பட்டினம் (3) பாலசோர் (4) ஹூக்ளி

100. சூரத், காசிம்பஜார், பாலசோர் ஆகியவை ______ மற்றும் ______ ன் வணிக மையங்களாக இருந்தன.

(1) டச்சு, பிரெஞ்சு (2) டச்சு, டேனிஷ்

(3) டச்சு, ஆங்கிலேயர் (4) பிரெஞ்சு, ஆங்கிலேயர்

101. போர்ச்சுக்கீசிய அதிகாரம் வீழ்ந்தது ______ம் நூற்றாண்டு

(1) 16 (2) 17 (3) 18 (4) 19

102. விலைமதிப்பற்ற வரலாற்றுத் தகவல்களின் பெட்டகமாக விளங்கும் ஆவணக் காப்பகங்கள் ______.

(1) லிஸ்பன், கோவா, பாண்டிச்சேரி, சென்னை

(2) சென்னை, கோவா, கடலூர், பசீன்

(3) கோவா, டையூ, டாமன், சென்னை

(4) பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, சென்னை

103. தரங்கம்பாடியை டானஸ்பெர்க் என அழைத்தவர் ______.

(1) ஆங்கிலேயர்கள் (2) டேனியர்கள்

(3) டச்சுக்காரர்கள் (4) பிரெஞ்சுக்காரர்கள்

104. சர் தாமஸ் ரோ வணிக மையம் நிறுவாத இடம் எது?

(1) ஆக்ரா (2) அகமதாபாத் (3) புரோச் (4) கொச்சின்

105. விஜயநகரப் பேரரசுடன் நட்பு பாராட்டியவர் ______.

(1) அல்மெய்டா (2) அல்புகர்க்

(3) நினோ-டி-குன்கா (4) டியூப்ளே

106. நவீன இந்தியாவின் முதல் நாணயம் வெளியிடப்பட்ட ஆண்டு

LIVEWORKSHEETS

(1) கி.பி. 1862 (2) கி.பி. 1768 (3) கி.பி. 1882 (4) கி.பி. 1885

107. கூற்றுகளை ஆராய்க

கூற்று A: பீஜப்பூர், குஜராத் சுல்தான்கள் எகிப்து மற்றும் துருக்கிச் சுல்தான்களுக்கு ஆதரவளித்தனர்.

காரணம் R: இந்தியப் பெருங்கடலில் அரேபிய வர்த்தகத்தைப் போர்ச்சுகீசியர் தகர்க்க முயன்றனர்.

(1) கூற்றும், காரணமும் சரி (2) கூற்றும், காரணமும் தவறு

(3) கூற்று சரி, காரணம் தவறு (4) கூற்று தவறு, காரணம் சரி

108. இந்திய ரிசர்வ் வங்கி நிறுவப்பட்ட ஆண்டு ______.

(1) 1935 (2) 1953 (3) 1947 (4) 1835

109. பின்வருவனவற்றுள் சரியான கூற்று / கூற்றுகளைத் தேர்ந்தெடுக்கவும் (NMMS-2020-21)

i. பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா முதல் போர்ச்சுகீசிய ஆளுநர் ஆவார்.

ii. அல்போன்சா-டி-அல்புகர்க், விஜயநகரப் பேரரசுடன் நட்புறவை மேற்கொண்டார்.

iii. கோவா முதலில் போர்த்துகீசியர்களின் தலைநகரமாயிருந்தது. பிறகு கொச்சிக்கு மாற்றம் செய்யப்பட்டது.

(1) iii மட்டும் (2) i மற்றும் iii மட்டும்

(3) i மற்றும் ii மட்டும் (4) அனைத்தும்

110. வியாபாரத்திற்காக இந்தியாவிற்கு வருகைபுரிந்த கடைசி ஐரோப்பிய நாடு ___ (NMMS-2020-21)

(1) இங்கிலாந்து (2) பிரான்சு

(3) போர்ச்சுக்கல் (4) டென்மார்க்

111. போர்ச்சுகீசிய பயணி வாஸ்கோடகாமாவை வரவேற்று உபசரித்த இந்திய மன்னர் ______. (NMMS-2016)

LIVEWORKSHEETS

(1) இராமச்சந்திர தேவா (2) சிங்கனா

(3) ஜஹாங்கீர் (4) சாமரின்

112. இந்திய தேசிய ஆவணக்காப்பகம் அமைந்துள்ள இடம் _______.(NMMS 2019-20)

(1) புது தில்லி (2) மும்பை

(3) கொல்கத்தா (4) சென்னை

LIVEWORKSHEETS